

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'உம்மையல்லாமல்' என்னால் ஒன்றும் முடியாது!

மெய்யான திராட்சைச் செடியாகிய கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் திராட்சைக் கொடி பாக்கியமுள்ளது! தன்னை 'பெலஹீனமான கொடி' என உணர்ந்தவர்களே, கர்த்தர் மீது சார்ந்து கொண்டும் விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள். செடியாகிய அவரில் நிலைத்திராவிட்டால், கொடியாகிய அவர்கள், உலர்ந்து போவார்கள்! என்பது அவர்களுக்குத் தெரியும்! **'இங்குதான்' ஓர் அற்புத நிகழ்வு நடக்கிறது!** கொடியான அவன், செடியில் நிலைத்திருக்கும் விசுவாச உறுதியை காணும் கர்த்தர் "செடியாகிய நான் கொடியில் நிலைத்திருப்பேன்" என வாக்குரைத்தார்! கொடியாகிய அவனைப் பார்த்து, அவரே தந்த அங்கீகாரமே "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது!" என்ற 'மிகுந்த கனிதரும்' அற்புத அங்கீகாரம்! (யோவான்15:5). "பிதாவன்றி..... குமாரன் தாமாய் ஒன்றையும் செய்ய மாட்டார்!" என வாழ்ந்த நம் விசுவாச முன்னோடியான இயேசுவுக்கே ஸ்தோத்திரம்! (யோவான்.5:19).

_tr

பெட்டகம் 23 | மே 2021 | பரல்கள் 05



# ‘ஜெபத்தின் வலிமை’ சபைகளில் பெருக வேண்டும்!

பெரும்பாலான சபைகளில் ‘அன்றுபோல் இன்று’ ‘ஜெபம்’ இல்லை என்பதை பகிரங்கமாய் கூறலாம்! ஒரு சபையில் நடக்கும் கூட்டங்களில் ‘ஜெபக்கூட்டமே’ வலிமையான கூட்டமாக இருந்திட வேண்டும்! ஆகிலும், பெயரளவில் நடக்கும் ஜெபக்கூட்டங்கள் சில சபைகளில் காணப்பட்டாலும், அது பெலவீனமான ஜெபக்கூட்டமாகவே நடத்தப்படுவது, வருத்தமிகு விஷயம்! ஆதிநாட்களில், வாரத்தில் ஒருமுறை நடத்தும் ஜெபக்கூட்டம் கூட, இன்றைய சபைகளில் மறைந்து விட்டது! **எந்த வலிமையான ஊழியமும், ஸ்தல சபையின் ஜெப வாழ்க்கையை மையம் கொண்டதாகவே இருக்கிறது!**

நம்முடைய சபையின் ஜெபங்கள், சுய நல நோக்கத்திற்காகவோ தங்களின் ஸ்தாபன வளர்ச்சிக்காகவோ இருப்பது ஒழிய வேண்டும். அதற்குப் பதிலாக, தேவன் ஒருவரையே நமது இலக்காக வைத்து ஜெபிக்க வேண்டும். தேவனுடைய கனத்திற்கு ஏற்பட்ட இகழ்ச்சி! குமாரனாகிய இயேசுவையும் அவரது பிரமாணங்களையும் புறக்கணிக்கும் சோகம்! அவருடைய நாமத்திற்கு ஏற்பட்ட இழுக்கு! அவருடைய வேதம் மூன்றாம் ஸ்தானத்திற்கு புறக்கணிக்கப்பட்ட அவலம்! சபைகள் ‘களியாட்டு கூடாரமாகவும்’ சமூக உறவுக்காக கூடும் கூட்டமாகவும் மாறியிருப்பது துயரமன்றோ! இவ்வாறெல்லாம், கர்த்தருடைய சபைகளின் வீழ்ச்சிகளுக்கு மனபாரம் கொண்டு ஜெபிக்கும் சபைகள் ‘அங்கொன்றும் இங்கொன்றுமாக’ எழும்புவார்களாக!

*-Ed*

**2021 ‘பரலோக பொக்கிஷங்கள்’ – வருட சந்தா ரூ.150.00**

*அநேகர் சந்தாவை புதுப்பித்ததற்கு நன்றி! புதுப்பிக்காதவர்கள்* **ஏப்ரல் 15–ம் தேதிக்குள்** *அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில்* **3***பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.***125***/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.***900***/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள்* **‘புதிது’** *என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## 'ஜீவிய ஆதாரமே' உத்தம ஐக்கியத்தின் இரகசியம்!

மார்க்க சபைகளில், ஒருவருக்கொருவர் ஒத்துக் கொண்டால் ஐக்கியம் என கருதுவார்கள். ஆனால் நமக்கோ, ஐக்கியத்தின் முதலாவது முக்கிய தேவை, "ஒரே விசுவாசமும்..... அந்த விசுவாசத்தை அறிக்கை செய்வதுமேயாகும்" மேலும், இந்த விசுவாசத்திற்கு கீழ்ப்படிவது மூலமாய், நாம் கண்டடைந்த கறையற்ற பரிசுத்த ஜீவியமே.... நம் ஐக்கியத்தின் உறுதியான அடிப்படை ஆதாரமாயிருக்க வேண்டும்!

நம்முடைய பெலவீனமான சுபாவங்கள் அல்லது உள்நோக்கமற்ற சில தவறுகள் அல்லது மேலோட்டமாய் தோன்றும் சில தீமைகள்.... நாம் ஒருவருக்கொருவர் கொண்ட ஐக்கியத்தை சீர்குலைத்திட அனுமதிக்கவே கூடாது. இதற்கு மாறாக, நாம் ஒருவருக்கொருவர் கொண்ட விசுவாசத்திலும் அன்பிலும் கொண்ட ஐக்கியமும், பணிவிடை ஊழியமும்..... நம் பழக்கவழக்கங்களையும் மேலோட்டமான தீமைகளையும் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றுவதாயிருக்க வேண்டும்!

**மாம்ஷீகமானவனுக்கு இவைகள் புரிவதில்லை. அவன், அந்தந்த சமயங்களில், தனக்குப் பிரியமானவைகளை மனதில் வைத்துக் கொண்டு, உடனடியாக நியாயத்தீர்ப்பு வழங்குவதையே தன்னுடைய பங்காய் கொண்டிருப்பான்!**

அவன் கண்களில் விசுவாசமோ, விசுவாச அறிக்கையோ, தேவன் விரும்பிடும் பரிசுத்தமோ, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தேவ தயவு செய்து வரும் கிரியைகளோ.... அவனது மாம்ச கண்களுக்குத் தெரிவதில்லை!!

**'உள்ளத்தில் மறைத்து வைத்திருக்கும் கறைகள் கூட'** ஐக்கிய குறைவை ஏற்படுத்திவிடும். இதுபோன்றவர்கள், பக்தியுள்ள சகோதரர்களை நெருங்கி வருவதில்லை. அதற்கு காரணம் "தங்கள் மறைவான அசுசிகள் வெளிப்பட்டுவிடுமோ" என்ற அவர்களது அச்சமேயாகும்! அல்லது பிறரை நியாந்தீர்க்கும் மனப்பான்மையோடு **"தங்களுக்கே விளங்காத பகுதிகளைக் கூறி"தூரநிற்பார்கள்!** இதுபோன்றவர்கள், சீக்கிரத்தில் இடறி,

*கிறிஸ்துவின் வைராக்கியத்திற்கு மிக குறைந்த தரத்தையே சபையில் கொண்டுவர விரும்புவார்கள்! இத்தனை கண்சொருகிப்போன நிலையில், எளியவர்களுக்காக தாங்கள் பாடுபடுவதைப் போலவும், தாங்கள் செய்வது தேவனுக்குப் பிரியமானது எனவும் அடிக்கடி கூறிக் கொள்வார்கள். அவ்வாறு கூறும் அவர்களது வார்த்தைகளை, அந்தரங்கத்தில் வீழ்ச்சியுற்ற விசுவாசிகள் 'தாராள ஐக்கியத்துடன்' கேட்பார்கள்!*

*மெய்யான ஐக்கியத்தை நாடுவோர், தங்கள் ஸ்தல சபைக்கு கண்காணியாயிருப்பவரிடம் தங்களை மறைத்துக் கொள்ளவே மாட்டார்கள். 'தங்கள் இருதய சிந்தைகளை மறைத்துக் கொள்ள' துணிந்தவர்கள் யாராயிருந்தாலும், அந்த ஸ்தல சபையை விட்டே தங்களை வெளியே வைத்துக் கொண்டவர்களாய் இருப்பார்கள்! அதுபோலவே, அந்த ஸ்தல சபையின் கண்காணியானவரும் தங்கள் சிந்தைகளை சக விசுவாசிகளிடம் பகிரங்கமாய் மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்ளவும் வேண்டும். இதுபோன்ற செயலால், ஜனங்கள் அந்த கண்காணியானவரை எளிதில் புரிந்துகொண்டு, அவரோடு ஐக்கியமாயிருப்பார்கள்! சபையில் பரிசுத்தவான்களாக வாழ்ந்திட வாஞ்சிப்பவர்கள், தங்களை நடத்துபவரிடம் முழுவதுமாய் மனம் திறந்து பேச விருப்பம் கொண்டிருக்க வேண்டும் (2கொரி.5:11). அப்போதுதான் அந்த சபையின் மூப்பராயிருப்பவர்கள்,* மகிழ்ச்சியுடன் *அவர்களுடைய இரட்சிப்பிற்கு பிராயாசப்படும்படி தூண்டப் படுவார்கள்! (எபி.13:17).*

*தேவனுடைய வீடாயிருக்கும் அவரது சபையில், கீழ்கண்ட வசனத்தின் சூத்திரத்தை கைக்கொண்டு வாழ மறவாதிருக்க வேண்டும்:* "**மறைவானவைகள்** *நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்!* **வெளிப்படுத்தப்பட்டவைகளோ....** *நமக்கு உரிய வைகள்"(உபா.29:29). இந்த வசனம் தன்னை தாழ்த்த விரும்பும் ஒவ்வொரு மூப்பருக்கும் அல்லாமல், நம் அனைவருக்குமே உரியதாகும். ஸ்தல சபைக்குள் 'வெளியரங்கமான' தொந்தரவு செய்யும் பொல்லாத குணமுள்ளவர்களை, சபையின் கண்காணியாயிருப்பவர் விசாரித்து, நியாயந்தீர்த்து, அந்த பொல்லாத நபரை சபையிலிருந்து விலக்கி வைப்பதற்குகூட வேதத்தில் அனுமதி தரப்பட்டுள்ளது.*

**ஆனால் எது பொல்லாதவைகளாக நியாயந்தீர்க்கப்பட வேண்டும்? 'எவைகளெல்லாம் வெளியரங்கமாக காணப்படுகிறதோ' அவைகளே நியாயந்தீர்க்கப்பட வேண்டும். அல்லாமல், நாமாக யூகித்துக் கொள்ளுகிற பொல்லாதவைகள் அல்ல!**

*வெளியரங்கமாக்கப்பட்டதும், கிட்டதட்ட சபையிலுள்ள எல்லோருடைய கண்களுக்கும் தெளிவாய் தோன்றப்பட்டவைகள் நியாயந்தீர்க்கப்படும்போது, எல்லா ஜனங்களும் அதை ஏற்றுக் கொள்வார்கள்! அவர்களும், பயபக்தியுடன் சபையில் செழித்து வளருவார்கள்!*

*எதுவும் வெளியரங்கமாயில்லாமல், என் மனதிற்கு தோன்றி யதைக் கொண்டு என் சகோதரனை நான் நியாயந்தீர்த்தால்,* **“பொறாமையின் விதை”** *விழுவதற்கு என் இருதயத்தை சாத்தானுக்கு கொடுத்தவனாவேன். இதன் விளைவு கொடியது:*

**பிழை காணப்படாத அந்த உத்தம சகோதரனை நான் நியாயந்தீர்த்து விலகுவது மாத்திரமல்லாமல்..... இன்னும் அதிகமான கறைபடும் பாவங்களுக்கு நேராய் என் இருதயம் வேர்கொண்டு தாவி பிடித்துவிடும். இங்குதான், நாம் யாவரும் மிகுந்த எச்சரிக்கை கொண்டிருக்க வேண்டும்.**

*உங்களுக்கும், உங்களைச் சார்ந்த மற்றவர்களுக்கும் சுகம் கொண்டுவர ஒரே ஒரு வழிதான் உண்டு. நீங்களாக உள்ளத்தில் வைத்துக் கொண்ட, பிறரைக் குறித்த அபிப்பிராயங்களையும், எண்ணங்களையும் தூர எறிந்து, உங்களை மாத்திரமே நியாயம் தீர்த்துக் கொள்வது தவிர வேறு வழியில்லை.....!*

*ஒருவருக்கொருவர் ஐக்கியம் என்பது, ஒரு இங்க் பேனாவைக் கொண்டு ஒரு பதிவேட்டில் பெயர்களை எழுதிவைப்பது போன்றது அல்ல! மெய்யான ஐக்கியம் “ஒவ்வொரு மனந்திரும்பிய விசுவாசியின் உத்தம ஜீவிய அடிப்படையில்” கட்டப்பட்டு உருவாகுவதேயாகும். ஆம், இவ்வித உத்தம ஜீவியம் உடையவர்களைக் கொண்டு மாத்திரமே தேவன் ஐக்கியத்தைக் கட்டுகிறார். இவ்வித தரம் நிறைந்த உத்தம ஐக்கியமே பேணி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தேவன் அக்கறை கொண்டிருக்கிறார்.*

*காரியத்தின் முடிவாக “எனக்கு மறைவாக வெளிப்படுத்தப்பட்ட வைகள், அந்தரங்க மறைவிலே நியாயந்தீர்க்கப்பட வேண்டும்.....* **ஒன்று எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடி நடந்தால்** *அவைகள், எல்லோ ருக்கும் முன்பாக நியாயந்தீர்க்கப்பட வேண்டும்” (1தீமோ.5:20). மாம்சத்திற்குரிய கிறிஸ்தவன் இந்த எளிய! இணக்கமான! நேர்மையான! பிரமாணத்தை புரிந்து கொள்ளான். அதுஏனெனில், இந்த பிரமாணங்கள் அவனுடைய இருதயத்தில் இடம் பெற்று வாழவில்லை. ஒரு ஆவிக்குரிய மனுஷன் இந்த இணக்கம் நிறைந்த பிரமாணத்தை நேசிப்பான், அதன்படி நடப்பான்!!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

## ஊழிய பாதையில் 'பாடுகளின் கிரயம் செலுத்த' ஆயத்தமானேன்!

என் ஆத்துமா 'எப்போதும்' புதிதான ஜீவியத்தில் நிலைத்திருந்தது உண்மைதான்! ஆகிலும், இப்போது நான் அனுபவித்த 'புது ஜீவியம்' முன்புநான் கொண்டிருந்த மாறாத ஜீவனுக்குள் இருந்ததென என்னால் யோசிக்க முடியவில்லை! ஏனெனில்,

**கிருபை பிரவாகத்தின் புது ஜீவிய அனுபவம், எனக்கு எப்படி இருந்த தென்றால்.... மலர்ந்திட்ட புது ஜீவிய ஆரம்பம், தொடர்ந்து பகலின் முழுமைக்கு எழுந்து வந்ததைக் கண்டேன்!**

அந்த பகல், இரவை தன்னோடு கொண்டு வரவில்லை! மேலும், அந்த புதிதான ஜீவன் கண்ட பாக்கியம் என்னவெனில், மரண பயத்திற்கோ அல்லது மரணத்திற்கோ அஞ்சாத ஜீவனாயிருந்தது! உண்மைதான், நமக்காக 'முதல் மரணத்தை' ருசித்த ஆண்டவர், இனியும் இரண்டாவது மரணத்தை அடையப் போவதில்லையே.... அதுபோலவே, கிருபை பிரவாகம் என்னுள் வாசம் செய்தது!

என் வயதோ அல்லது சரீர பெலவீனமோ இப்போது எனக்கு தடையாய் தோன்றவில்லை! என் பணிகளை முடித்த நள்ளிரவு நேரத்தில் என் முழங்காலில் பணிந்து, நேசரோடு உறவாடி ஜெபித்தேன். அந்த ஜெபம் அதிகாலை 4 மணிவரைகூட என்னை மறந்து கர்த்தரோடு அளவளாவி இருக்கச் செய்தது! இவ்வாறாகவே என் இரவு நேரங்கள் கர்த்தரோடு கொண்டிருந்த **அழியாத ஐக்கியமாய்** மாறியது! இவ்வித மனம்மகிழும் ஜெப அனுபவத்திற்குப் பிறகு, தந்தை லா கோம்பே என்னை மீண்டும் சந்தித்தபோது ஒரே ஒரு வாக்கியத்தை மிகுந்த உறுதியோடு என்னிடத்தில் கூறினார்: "சகோதரியே ஒரு எழில் மிகுந்த இராஜ கட்டிடத்தைக் கட்டுவதற்கு உங்களை 'ஒரு கற்பாறையாய்' கர்த்தர் வடிவமைத்து வைத்திருக்கிறார்" என உரைத்துச் சென்று விட்டார்!

நான் எவ்வித சித்திர வடிவ கட்டிடமாய் திகழ்வேன் என்பது அவருக்குத் தெரியாது.... ஆனால், நான் எவ்வாறு தேவனுக்குரிய மாளிகையாய் கட்டப்படுவேன் என்பதை நான் மாத்திரம் அறிந்திருந்தேன். என்னுடைய புதிதான ஊழிய ஜீவியத்தில் 'இவ்வித வடிவமைப்பின்' கிரயம் மிகுதியாய் இருந்தாலும், அதை நான் மனதார ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தேன்! அல்லது, பரலோகத்தின் **நவ எருசலேமின் கற்களில் ஒன்றாய்** என்னை மாற்றினாலும், அதுவும் அவருக்கு பிரியமாய் நிறைவேறுவதாக! என அர்ப்பணித்தேன்.

அப்படி நான், புதிய எருசலேமின் விலையேறப்பெற்ற கல்லாய் மாற

*வேண்டுமென்றால், அந்த கல் வெளியே 'பாலிஷ்' செய்யப் பட்டால் போதுமென என்னால் கருத முடியவில்லை! அதற்கு மாறாக, பெரிய சம்மட்டியால் அடித்தே புதிய எருசலேமின் விலையேறப்பெற்ற கல்லாய் என்னை உருவாக்குவார் என்பதையே என் கண்களுக்கு முன்பாக நிலைநிறுத்திக் கொண்டேன். ஏனெனில், அந்நாள் முதல் இந்நாள்வரை என் ஆத்துமாவிற்கு அதுபோன்ற விலைமதியா கல்லின் தரத்தையே எனக்குள் தந்து வந்திருக்கிறார். அசைவில்லாத உறுதி தன்மை! என்னை முழுவதும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும் ஜீவியம்! சுயத்தின் யாதொரு ரூபத்திற்கும் மனம் புண்படாதிருக்கும் உணர்வற்ற தன்மை! கர்த்தருடைய பலத்த கரத்தில் நடைபெறும் தீங்கனுபவிக்கும் நிகழ்ச்சிகள்! அதைத் தாங்கும் பரத்தின் பெலனை தந்தருளும் கிருபை!..... ஆகிய அனைத்து வலிமையான கிரியைகளும் செயல்பட்டு விளைவது தான், எருசலேமின் விலையேறப்பெற்ற கல் என்பதை என் உள்ளம் ஊர்ஜிதமாய் உணர்த்தியது!*

இப்போது நான், என் சிறிய மகளை தூக்கிக்கொண்டு டோனான் மாகாணத்தின் '*ஊர்சுலைன்ஸ்*' என்ற இடத்திற்கு கொண்டு வந்தேன். அவள் சிறிய பிள்ளையாய் இருந்தாலும், கர்த்தருடைய ஞானம் அவளிடத்திலிருந்தது. தந்தை லா- கோம்பே மீது அவள் விசேஷித்த அன்பு பாராட்டினாள். இவர் "**தேவனே எனக்கு அனுப்பிய நல்ல தந்தை**" என அடிக்கடி கூறுவாள்!

ஒருநாள், ஊர்சுலைன்ஸ் தேவாலயத்தில், ஒரு கிறிஸ்தவ துறவியைக் கண்டேன். அவரை '*அன்ஸலம்*' (Ansalm) என ஜனங்கள் பேர் சொல்லி அழைப்பதுண்டு. அவர் ஜெனிவா பட்டணத்தை சேர்ந்தவர். அவரை கர்த்தர் அழைத்தபோது, தனது 19-வது வயதில் அகஸ்டின் துறவியோடு தன்னை இணைத்துக்கொண்டார். இருவரும் தங்கியிருந்த துறவி மடத்திற்கு, அவர்கள் இருவரும் யாரையும் அனுமதிப்பதில்லை. ஆலயத்திற்கு வரும்போதுதான் ஜனங்கள் அவர் களைச் சந்திப்பார்கள். அவரின் துறவிமடம் ஓர் சிறிய குடிசை! அங்கு வாழ்ந்த 12 ஆண்டுகளும் உணவு சாப்பிடாமல், தானியங்களும் தண்ணீருமே குடித்து வாழ்ந்தார்கள். அவ்வப்போது கொஞ்சம் எண்ணெயும் சாப்பிடுவார்கள். திராட்சரசம் ஒருபோதும் அருந்திய தில்லை! மிக அபூர்வமாய் 'மதிய உணவு' சாப்பிடுவார்கள். ஒரு கம்பளி ஆடையை உடுத்தியிருந்தாலும், வெறும் காலோடுதான் அமர்ந்து, நடந்து, படுப்பார்கள். மிகுதியான மனத்தாழ்மை கொண்ட 'அன்ஸலம்' துறவி 'தொடர்ச்சியான ஜெப ஜீவியம்' கொண்டிருந்தார்கள். அவ்வப்போது

*அவர் ஜெபித்த அத்தனை பேருக்கும் அற்புதமான சுகத்தை ஆண்டவர் தந்தருளினார்!*

*இந்த நல்ல கிறிஸ்தவ துறவி தேவனோடு நெருங்கிய தொடர்பு டையவராய் தந்தை லா- கோம்பேக்கும், சில சமயங்களில் எனக்கும் மிகச் சிறந்த ஆலோசனைகளை அவர் கூறியுள்ளார். ஒருசமயம் என்னைப் பார்த்து "யாரும் அனுபவியாத* **விசேஷித்த சிலுவைகளை** *நீ அனுபவிப்பாய்" என்று கூறினார். இவ்வாறு அவர் கூறிய அனைத்தும் ஆத்தும பெலனுக்கு ஏதுவாய் இருந்ததைக் கண்டேன்!*

*– மேடம் குயான்*

---

## 'கிறிஸ்துவை அறிந்த' சீஷர்களைக் கொண்டே சபை கட்டப்படுகிறது!

*மார்க்கங்கள் பல உண்டு. மார்க்கங்களை உண்டு பண்ணின வர்களும் அம்மார்க்கங்களும் ஒன்றல்ல. உண்டு பண்ணினவர்கள் இல்லாமலேகூட, அம்மார்க்கங்களை மனுஷர்கள் அனுசரித்து வருகிறார்கள். "என்னை நம்புங்கள் நான் உங்களுக்கு உதவிசெய்வேன்" என்று புத்தன் சொல்லவில்லை. ஆகிலும், புத்தமார்க்கம் இருக்கிறது! அதுபோலவே, முகமது மார்க்கமும் மற்ற மார்க்கங்களும் இருக்கின்றன. கிறிஸ்து மார்க்கமோ அப்படிப்பட்டதல்ல!*

**கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்து மார்க்கம் இல்லை. அவரே அதற்கு ஜீவனாயிருக்கிறார். கிறிஸ்துவே கிறிஸ்து மார்க்கம். தம்மை இன்னா ரென்று வெளிப்படுத்தவே அவர் உலகில் வந்தார்!**

*கிறிஸ்துவின் ஆரம்ப உபதேசமும் கிரியைகளும், ஜனங்கள் தம்மை அறிந்து கொள்ளும்படி அவர்களை ஆயத்தம் செய்வதா யிருந்தன. திரளான ஜனங்கள் அவரை இடைவிடாமல் பின்பற்றின போதிலும் அவரை 'இன்னாரென்று' அறிந்து கொள்ளவில்லை. வரவர, அநேகர் அவரைவிட்டு விலகினார்கள். அதிகாரிகள் தூண்டுதலால் அநேகர் அவருக்கு விரோதிகளானார்கள். தமது பலத்த கிரியைகளைக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற்போனபடியால், அவைகளைக் கடிந்து கொண்டார்.* **மக்கள் மீது கொண்ட 'அன்பான மனஉருக்கத்தில்' செய்த பொதுவான ஊழியத்தால், தேவ நோக்கம் நிறைவேறவில்லை.** *ஜனங்கள் தம்மை அறிந்து கொள்ளாமற்போனாலும், தாம் தெரிந்து கொண்ட சீஷர்கள் தம்மை அறிந்துகொண்டால் போதும் என்றே நிறை வான பிதாவின் ஊழியத்தை செய்து முடித்தார்!*

*அவர்களும் அவரை அறிந்துகொள்ளாமற்போனால், அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் தவறியதாகும். அவர் ஸ்தாபிக்கப்போகிற சபையின் அஸ்திபாரம், அவரது உபதேசங்களும் அற்புதங்களும்*

*அல்ல! அவைகள், அவரை அறிந்துகொள்வதற்கு ஏதுவான ஊழியங்கள் மாத்திரமேயாகும்!*

*சபையின் அஸ்திபாரம் கிறிஸ்துவே! அது அவரிலே கட்டப்பட்டு அவரிலேயே வளரவேண்டும். அவரை இன்னாரென்று அறிந்த வர்களைக் கொண்டே, அவர் தமது சபையைக் கட்டக்கூடும்! ஆகையால், தாம் உலகத்தைவிட்டுப் போகும் வேளை சமீபித்தபோது, பொதுவாய் பிரசங்கிப்பதை மாற்றித்* **தம்மையே பிரசங்கிக்கத் தொடங்கினார்.** *விசேஷமாய், தமது சீஷர்களோடு தனித்திருந்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தமானார்.*

**உலகம் அவரை அறியாமற்போனாலும் 'சிலராகிலும்' தம்மை அறிந்து கொண்டால், அவர்களைக் கொண்டு தமது சபையை ஸ்தாபித்து, அவர்கள் மூலமாய் உலகத்தை இரட்சிக்கலாம் என்பது அவரது திட நம்பிக்கையாய் மாறியது!**

*ஆகவே, அவர் கலிலேயாவை விட்டு நீங்கி, வடதிசை நோக்கி தீரு, சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார். அவர் பிலிப்பிய செசரியாவின் திசைகளில் வந்தபோது, தமது சீஷர்களைப் பார்த்து: "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யாரென்று சொல்லு கிறார்கள்" என்று கேட்டார். சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் எரேமியா அல்லது பூர்வ காலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். ஏனென்றால், மேசியா வருகின்ற காலத்தில், தீர்க்க தரிசிகள் உயிரோடெழும்புவார்கள் என்பது யூதருடைய நம்பிக்கை.*

*"அது போகட்டும், நீங்கள் என்னை யார் என்று சொல்லு கிறீர்கள்?" என்று கேட்டார். பேதுரு பிரதியுத்தரமாக: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து!" என்றார். ஆண்டவருக்கிருந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்த வில்லை. அதாவது, உன் சுய அறிவினால் இதை நீ கண்டுகொள்ள வில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா, இதை உனக்கு வெளிப் படுத்தினார். நீ பேதுருவாய் இருக்கிறாய்,* **இந்தக் கல்லின்மேல்** *என் சபையைக் கட்டுவேன் என்றார்! அதாவது, அவரை எலியா, எரேமியா, தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று சொல்லுகிறவர்களைக் கொண்டாவது, அல்லது அவர் மனுஷருக்கெல்லாம் மேலானவர், தேவ தூதர்களுக்குச் சமானமானவர் என்று சொல்லுகிறவர்களைக் கொண்டாவது, ஆண்டவர் தமது சபையைக் கட்ட முடியாது. இவர்* **தேவனுடைய புத்திரன் என்று அவரை அறிந்து,** *அறிக்கை செய்கிறவர்களைக்*

*கொண்டே அவர் தமது சபையை கட்டக்கூடும்!*

*சீஷர்கள் இப்படி அறிக்கை செய்தபோதிலும், அது பிதாவின் வெளிப்படுத்தலேயன்றி அவர்கள் ஆழமாய் தங்கள் அனுபவத்தில் கர்த்தரை அறிந்துகொண்டதல்ல! ஆகையால்தான், ஆண்டவர் மாம்சத்திலிருந்த நாள்களில், திருச்சபை ஸ்தாபிக்கப்படவில்லை. கிறிஸ்து இன்னாரென்றாவது, தேவ ராஜ்ஜியத்தின் தன்மை எப்படிப் பட்டதென்றாவது சீஷர்கள் இயேசுவோடு இருந்த கடைசிவரை பூரணமாய் அறிந்து கொண்டவர்கள் அல்ல. அவர் உயிர்த்தெழுந்த பின்புகூட "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்ஜியத்தை ரோமர் கையிலிருந்து விடுவித்து எங்களுக்குத் திரும்ப கொடுக்கப்போகிறீர்?" என்று கேட்டார்கள்.* **ஆனால் ஆவியானவரைப் பெற்று** *அவரால் போதிக்கப்பட்டபோது, தங்கள் நடுவில் சஞ்சரித்தவர் இன்னா ரென்றும், அவர் பிரஸ்தாபித்த தேவராஜ்ஜியம் எத்தனை உண்மை யென, அனுபவத்தில் கண்டறிந்தார்கள். கிறிஸ்துவின் தெய்வீக தன்மையைக் கண்டறிந்த அவர்களே, திருச்சபையைக் கட்டுவதற்கு ஜீவனுள்ள கற்களானார்கள்!*

**திருச்சபை, கிறிஸ்துவின் தெய்வீகத்தில் நிலைநிற்கிறது. கிறிஸ்துவின் தெய்வீகத்திலுள்ள விசுவாசமே திருச்சபையின் அஸ்திபாரம்!**

*இந்த விசுவாசமே அப்போஸ்தலருடைய கிறிஸ்து மார்க்கம்! அப்போஸ்தலருடைய ஜீவியமும் உபதேசமும் இந்த விசுவாசமே! இதற்காகவே தங்கள் ஜீவனையும் கொடுத்தார்கள். எலியா, யோவான்ஸ்நானன் போன்ற ஒரு தீர்க்கதரிசிக்காக அல்ல. ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்காக அவர்கள் பிழைத்தார்கள், உழைத்தார்கள், மரித்தார்கள்!*

*கிறிஸ்து, ஜீவனுள்ள ஆண்டவராக திருச்சபையோடிருந்து, கிரியை செய்து வருவதே இந்த வல்லமைக்கும் மாறுதலுக்கும் காரணம்!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## சொந்த ஜனங்களால் 'முதுகு உழப்படுவது' கல்வாரி அன்பு!

**க**ர்த்தருக்கென்று ஒரு **தூய சந்ததியை** உருவாக்க வேண்டுமென்ற நோக்கமே எங்கள் டோனாவூர் ஐக்கியத்தின் நோக்கமாயிருந்தது. ஊழிய காலத்தில், நான் சந்தித்த துன்பங்கள் ஏராளமாயிருந்தது. வெளியிலிருந்து ஏற்பட்ட துன்பங்கள் சகஜம் என்றே எண்ணி கர்த்தருக்கென்று மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். உருவாகி வரும் ஜனங்கள், கர்த்தருக்கென்று பிரகாசிப்பார்கள் என்ற எதிர்ப்பார்ப்பு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்தபடியால், அந்த நம்பிக்கையின் பிரகாசம்

மனமகிழ்ச்சியை தந்தது.

ஆகிலும், உருவாகி வந்த ஜனங்கள், கர்த்தருக்கென்று பணிபுரிய தீவிரம் கொள்ளாமல், **அதில் சிலர், நிலத்தை பண்படுத்தியவரையே உழவு நிலமாய் கொண்டு உழுததுதான் பெரும் துயரம்.** நம் ஆண்டவர் இயேசு இதுபோன்ற துயரத்தை அடைந்தாரென 129-ம் சங்கீதம் தீர்க்கத் தரிசனமாய் கூறுகிறது. முதலாம் வசனம் கூறுகிறபடி "என் சிறு வயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கினார்கள்" என கூறினார். அவர் பிதாவின் சித்தம் செய்தபடியால் "அநேகந்தரம் அவர்கள் நெருக்கியும் என்னை மேற்கொள்ளாமல் போனார்கள்" என்ற 2-ம் வசனம் கூறும் ஜெயத்தை இயேசு பெற்றிருந்தார்.

ஆனால், அதன்பின்பு பெற்ற அனுபவம்தான் மிகவும் துயரமான அனுபவம்! உழவுக்கு ஆயத்தம் செய்யப்பட்ட ஜனங்கள், கர்த்தருடைய பணியில் நேர்த்தியாய் முன் செல்வதற்குப் பதிலாக, 'அவரது முதுகையே' உழவு நிலமாய் கொண்டு "**கலப்பையால் உழுது விட்டார்கள்**" என்ற சோகம் இயேசுவை சுட்டிக்காட்டும் 3-ம் வசனமாய் கூறப்பட்டுள்ளது.

இயேசுவுக்கு நிகழ்ந்தது போன்ற துயரம், என் ஆசிரமத்து மக்களால் எனக்கும் ஏற்பட்டபோது என் மனம் கிலேசமுற்றது! அவர்களால் ஏற்பட்ட நெருக்கங்கள் என்னை 'தனிமைப்படுத்தியதைப் போல்' உணர்ந்தேன். கிறிஸ்துவின் ஏக சிந்தையில்லாத இவர்களோடு தான், நானும் வசிக்க வேண்டியிருப்பதை எண்ணி மனம் துவண்டேன்! சொந்த ஜனங்களால் புறக்கணிக்கப்படும் 'நூதன பரீட்சையை' இயேசு மனதிடத்துடன் எதிர்கொண்டார். ஆகவே, அவருடைய முதுகை ஆழமாய் உழுது போட்டார்கள்!

இவ்வாறு, பிறரால் அதுவும் சொந்த ஜனங்களால் ஏற்படும் துன்பத்திற்கு என் முதுகும் ஆழமாய் உழப்படுவதை ஏற்றுக்கொள்ள நான் தயங்கினேன்! இயேசுவைப்போல் என் முதுகு ஆழமாய் உழப் படுவதை விரும்பாத நான், 'கல்வாரி அன்பை' முற்றிலும் அறிய வில்லையே என மனம் கலங்கி 'தேவ பெலனுக்காய்' ஜெபம் செய்தேன்!

– ஏமி கார்மைக்கேல்

---

## குணசாலியான ஸ்திரீ அலங்கரிக்கும் 'முத்துச்சரங்கள்!'

**அ**வள், இயேசுவின் பாதத்தில் அமர்ந்து நல்ல பங்கை பெறும்

பெத்தானிய மேரியின் ஆவி கொண்டவள்!

கணவனுக்கு பயபக்தியுடன் கீழ்படியும்

சாராவின் அழகுடையவள்!

*சீறிவந்த சத்துருவின் சீற்றங்களை நேர்கொள்ளும்*
தெபோராவின் தைரியமுடையவள்!
*அறியப்படாத தேசத்திற்கும் அடியெடுத்து வைத்திடும்*
ரூத்தைப்போல் தேவ நம்பிக்கை நிறைந்தவள்!
*பெற்றபிள்ளையை தேவ தீர்மானத்தின்படி கர்த்தருக்கு தந்திடும்*
அன்னாளின் அர்ப்பணிப்பு மிகுந்தவள்!
*கர்த்தருடைய மகிமைக்கென்றே தன் பிள்ளைகளை வளர்த்திட*
யோகெபேத் போன்று தத்தம் செய்தவள்!
*கிறிஸ்துவுக்காக அவரது சபைக்காக தன் பிள்ளைகளைக் கட்டி எழுப்பும்*
ஐனிக்கேயாளின் உறுதி கொண்டவள்!
*அடுத்தடுத்த சந்ததிக்கு விசுவாசத்தை வைத்துச் செல்லும்*
லோயிசாளின் உத்தமம் கொண்டவள்!
*எண்ணற்ற விசுவாசிகளின் தேவை அனைத்திற்கும்*
தொற்காளின் மனதுருக்கம் கொண்டவள்!
*தன் குடும்பத்திற்கும் சபைக்கும் குறிப்பறிந்து உதவிடும்*
பெபேயாளின் ஊழிய இதயம் கொண்டவள்!
*பரிசுத்தவான்களின் உபசரிப்பிற்கும், மனப்பூர்வ திறந்த வாசலுக்கும்*
லீதியாளின் மனதைக் கொண்டவள்!
*உயிருள்ள மாதிரியாய் வாழ்ந்து காட்டும் இவளே,*
நீதிமொழிகள் 31 – ன் குணசாலியான ஸ்திரீயானவள்!

*– பூர்வ பக்த சிரோன்மணி*

---

## தொந்தரவு செய்யும் ‘அந்த நமது நபர்!’

நம்மில் அதிகபட்சமான பேர், யாரோ சில மானிடர் மீது ‘ஏதோ சில கஷ்டம்’ உடையவர்களாயிருக்கிறார்கள். நம்முடைய வீட்டிலோ, வேலை ஸ்தலத்திலோ அல்லது நம்மை வேலைக்கு வைத்திருப்ப வர்களோ அல்லது நாம் வைத்திருக்கும் வேலையாட்களோ, நம் மருமக்கள்மார்களோ, மாமனார் மாமியாரோ, பெற்றோர்கள் அல்லது பிள்ளைகளோ, உங்கள் மனைவியோ அல்லது உங்கள் கணவனோ... உங்கள் வாழ்க்கையை கஷ்டப்படுத்துவதாக இருக்கக்கூடும். இது போன்ற கஷ்டங்களை வீட்டிலுள்ளவர்களோடு வைத்துக் கொண்டு வெளியே யாருக்கும் தெரியாமல் வைத்திருப்பதே பெரும்பாலும் நல்லது. ஆகிலும் சில சமயங்களில், இந்த கஷ்டங்களை வெளியே கூறி விடுகிறோம். யாரோ வெளியிலுள்ள நண்பர் “ஏன் இப்படி கவலை யோடு இருக்கிறீர்கள்?” என கேட்டவுடன் எல்லா உண்மைகளையும் நாம் கொட்டிவிடுகிறோம்!

*இதுபோன்ற தருணங்களில், வெளியிலுள்ள உங்கள் நண்பர் "அது சரிதான், ஆனால் நீங்கள் ஏன் உங்கள் மனைவியிடமோ அல்லது கணவனிடமோ, தகப்பனிடமோ அல்லது மகளிடமோ, வேலையை கொடுத்தவரிடமோ அல்லது வேலை செய்பவர்களிடமோ... உங்கள் கஷ்டங்களைக் கூறி, சரி செய்து கொள்ளக்கூடாது? உங்கள் கஷ்டத்தை விளக்கிச் சொன்னால் அவர்கள் புரிந்து கொள்வார்கள். நல்ல நட்போடும் அமைதியோடும் உங்களுக்கு கஷ்டம் கொடுக்கும் அவர்களை அணுகி விளக்கிக் கூறுங்கள்! எல்லாம் சரியாகிவிடும்!" இப்படித்தான் வெளியிலுள்ள நண்பர்கள் அனைவரும் கூறுவார்கள்.*

**'அந்த நமது நபரைக் குறித்து' எத்தனை காரியங்களை நீங்கள் விவரித்துச் சொன்னாலும்.... இப்போது உங்களுக்குள் நீங்கள் சொல்லிக் கொள்வதெல்லாம் "என் நண்பருக்கு 'அந்த நமது நபரைக் குறித்து' தெரியாது!" என்ற உங்களது சோகமேயாகும்.**

*நண்பன் சொன்னதையெல்லாம் நாம் செய்திருப்போம்! ஆனால் 'அந்த நமது நபர்' கொஞ்சமும் புரிந்து கொள்வதில்லை. பலமுறை முயற்சித்தும், இனி சொல்லிப் பயனில்லை என்ற நம்பிக்கையற்ற நிலையை எட்டியிருப்போம் அல்லது 'அந்த நமது நபரிடம்' ஆரம்பத்திலிருந்தே கஷ்டத்தை அனுபவித்தபடியால் யாதொரு முயற்சியும் எடுக்காமலே இருந்திருப்போம். சில சமயங்களில் கஷ்டங்களுக்கு தீர்வுகாணும் நமது முயற்சியின்போது 'அந்த நமது நபர்' மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை செய்திருப்பார் அல்லது 'அந்த நமது நபர்' நம்மை ஆச்சரியத்துடன் பார்த்து "நீங்கள் இப்படி யெல்லாம் என்னை குறித்து சொல்வது என்னவென்றே புரியவில்லை" என்றும் கூறியிருப்பார். இதைவிட நூதனமாய் 'அந்த நமது நபர்' "நீங்கள் சொன்ன குறைகள் அனைத்தையும் ஒத்துக்கொண்டேன். இனிமுதற்கொண்டு புதிதாய் நான் வாழ்ந்து காட்டுவேன் என நாம் மகிழும்படி கூறிவிட்டு.... 24 மணி நேரம் கழித்து 'அந்த நமது நபர்' கொஞ்சமும் மாறாமல் அப்படியேயிருப்பார்!".*

*இவ்வாறு நீங்கள் எடுத்துக்கொண்ட அத்தனை முயற்சியும் 'அந்த நமது நபருக்கு' கப்பற்சேதத்தையே உண்டாக்கியது. 'அந்த நமது நபரின்' பொறாமையோ, சோம்பேறித்தனமோ 'தொட்டாற்சினிங்கி' போன்ற மனம் புண்படும் தன்மையோ அல்லது 'தான்' என்ற அகந்தையோ அல்லது முன்கோபமோ, தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மையோ.... சிறிதுகூட மாறாமல், கிணற்றில் போட்ட கல் போல அப்படியே இருப்பதைக் கண்டு நொந்து போனீர்கள். நீங்கள் நன்றாக சம்பாதிக்கும் காலத்தில் விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டும்,*

*நல்ல வசதிகளைக் கொண்டும் 'அந்த நமது நபரின்' கஷ்டங்களை போக்கி விடலாம்.... அதன் மூலம் போராட்டம் முடிந்து விடும்! என்றுகூட எண்ணி செயல்பட்டீர்கள்.*

**ஆனால் இத்தனை நன்மையானவைகளையும் செய்து முடித்த பின்பு 'அந்த நமது நபர்' மாறாமல் அப்படியேயிருக்கிறார்! உங்கள் பழைய கஷ்டம் இன்னமும் ஓயவில்லை!**

*நீங்கள் கோடீஸ்வரராய் மாறினாலும், உங்கள் மனைவி இன்னமும் உங்களை தொந்தரவு செய்து கொண்டுதான் இருக்கிறாள்! வழிதவறிய மகன் இன்னமும் குடித்துக் கொண்டுதான் இருக்கிறான்! பிரச்சனைக்குரிய மாமியார் அந்த பிரச்சனையோடு உங்களோடு சேர்ந்து வசித்துக் கொண்டிருக்கிறார்!*

*இவ்வாறு, வெளியிலுள்ள காரியங்களெல்லாம் வெகு சுமுகமாய் நடைபெற்ற போதும், உண்மையான சந்தோஷம் நீங்கள் சேர்ந்து வாழும் நபர்களின் 'குணாதிசயத்தை' சார்ந்துதான் இருக்கிறது என்ற உண்மையை மிகத்தாமதமாகப் புரிந்து கொண்டீர்கள்! வெளித் தோற்றமான எந்த உலக நன்மையான காரியமும் அவர்களின் குணாதிசயத்தை மாற்ற முடியவில்லை என்ற உண்மையையும் தாமதமாய் புரிந்துகொண்டீர்கள்! இவ்வித புரிந்து கொள்ளு தலுக்குப் பிறகுதான் முதன்முறையாக* ***"இவை அனைத்தையும் தேவன் எப்படி காண்கிறார்?"*** *என்பதை அறிய, ஆசை உங்களுக்கு உண்டாகிறது.*

*கர்த்தரோ, செல்வ செழிப்பான, அழகு மிகுந்த உலகைத் தந்தருளி, அதில் நீங்கள் வாழச் செய்திருக்கிறார். சிறந்த புத்திக்கூர்மையை உங்களுக்குத் தந்தார். அதை பயன்படுத்தும் வழியையும் காண்பித்தார். நல்ல மனசாட்சியை தந்தார். அதைப் பத்திரமாய் காத்துக்கொள்ளும் வழியையும் காண்பித்தார். உங்களை மகிழச்செய்யும் புசிப்பையும், குடிப்பையும், ஓய்வையும், உறக்கத்தையும், துள்ளி ஓடியாடும் பயிற்சிகளையும் அளித்தார். இவைகள் அனைத்தையும் அவர் உங்களுக்குத் தந்த பின்பு, அவர் தந்த நோக்கம் முற்றிலும் கெட்டுப் போனதை காண்கிறார். கிட்டத்தட்ட, நம்முடைய நல்ல திட்டங்கள் சிலருடைய தீமையால் கெட்டுப்போவதைப்போலவே, தேவனுக்கும் சம்பவித்தது. நம்மை மகிழச் செய்வதற்காக தேவன் கொடுத்த அனைத்தும் வாக்குவாதத்திற்கும், பொறாமைக்கும், மாயைக்கும் உரியதாய் மாறிப் போய்விட்டது!*

*இந்த வேளையில் நீங்கள் சொல்லத் துடிப்பது என்னவென்றால்,*

"இந்த நல்ல தேவன் 'அந்த நமது நபரின்' குணத்தை ஏன் மாற்றக் கூடாது?" என்ற கேள்விதான்!

**உண்மை என்னவென்றால், தேவனுக்கு ஒரு பிரமாணம் உண்டு. அந்த பிரமாணத்தின்படி 'ஜனங்களின் குணாதிசயத்தை தன் வலிமைக்கொண்டு கட்டாயப்படுத்தி மாற்ற மாட்டார்!' என்பதுதான். ஒருவனை மாற்றுவதற்கு அவரால் முடியும்.... ஆனால், ஜனங்கள் அந்த மாற்றத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தால் மாத்திரமே செய்வார். இந்த அடிப்படையில் 'தன்னுடைய வல்லமையில்' மட்டுப்படுத்தப்பட்டவராகவே இருக்கிறார்!**

*சில சமயங்களில், இப்படியெல்லாம் ஏன் செய்தார்? அல்லது இப்படி தேவன் செய்யாமல் இருந்திருக்கலாமே? என்றெல்லாம் மன வேதனையில் அவரை கேள்விக் கேட்கிறோம். இவ்வித கேள்விகளால் தேவனுக்கு எவ்வித பிரயோஜனமும் இல்லை. ஏனெனில், எத்தனை இடர்கள் மத்தியிலும் 'சுயாதீனமாய்' வாழும் உலகத்தையே அவர் விரும்புகிறார். இடர்பாடுகள் ஏதுமில்லாமல்* **ஒரு எந்திரத்தைப்போல்** *வாழும் ஜனத்தை அவர் விரும்புவதில்லை. முழு உலகமும் இடர்பாடு இல்லாத அல்லது* **கஷ்டமேதுமில்லாத தான் இயங்கியாய்** *இயங்கும் பூரண வடிவுகொண்ட உலகத்தை சற்று கற்பனை செய்து பாருங்கள்! கஷ்ட மில்லாத அந்த உலகத்தில்* **உயிரோட்டமான பரவசம்** *இருப்பதில்லை! இதை நீங்கள் விளங்கிக்கொண்டால், தேவனுடைய ஞானம் எத்தனை பெரியது என்பதை நீங்களே அறிவீர்கள்!*

*ஜனங்களின், அதாவது 'அந்த நமது நபரின்' குணாதிசயத்தை மாற்றும் நம்முடைய திட்டங்கள் 'கப்பற்சேதமாகிப்போனதை' நாம் காண்பதைப்போலவே, தேவனுக்கும் அவ்விதமாகவே இருக்கும் என்ற உண்மையை நம்மால் கொஞ்சம் விளங்கிக்கொள்ள முடிகிறது! அது ஓரளவு உண்மை என்றாலும், தேவன் காணும் விதம், நாம் காணும் விதத்திற்கு இரண்டு வகையில் வித்தியாசப்படுகிறது. நாம் காண்பதைப் போலவே, வீட்டிலுள்ள அல்லது உங்கள் பணியிலுள்ள அல்லது வேலை ஸ்தலத்திலுள்ள எல்லா ஜனங்களும் பல்வேறு கஷ்டத்தை உங்களுக்கு உட்படுத்தினாலும்.....*

**உங்கள் இல்லத்தையும் உங்கள் தொழில் ஸ்தலத்தையும் அல்லது அலுவலகத்தையும் உற்று காண்கிற தேவன் நீங்கள் இதுவரை காணாத 'தொந்தரவான இன்னொரு நபரையும்' அவர் காண்கிறார். யார் அந்த இன்னொரு நபர்? எல்லாம், நீங்கள்தான் அந்த இன்னொரு நபர்!**

*இதுவே தேவனுடைய ஞானத்தில் நீங்கள் காண வேண்டிய மற்றொரு படியாகும்.... அதாவது 'அந்த நமது நபரைப்போலவே' நீங்களும் இருக்கிறீர்கள் என உணர்ந்திடும் அறிவு! உண்மைதான்*

உங்கள் குணாதிசயத்திலும் மரண குற்றத்திற்கு ஏதுவான பிழை இருக்கிறது. நீங்கள் நம்பி திட்டமிட்டதெல்லாம் 'அந்த நமது நபரிடம்' கப்பற்சேதமானது போலவே 'அந்த நமது நபர்' உங்கள் குணாதிசய மாற்றத்திற்கும் நம்பிக்கைக்கும் கொண்ட திட்டங்களும் உங்களிடம் கப்பற்சேதமாகிப் போனது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வது மிகப்பெரிய தெய்வீக ஞானம் என்பதை அறியுங்கள்!

இப்படி அறிந்து கொள்ளாமல், பொதுவான மழுப்பலாக "ஆமாம், என்னிடத்திலும் குறைகள் இருக்கத்தான் செய்கிறது!" என கூறுவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. **"நீங்கள் அறியாத குறை" உங்களிடத்தில் நிச்சயமாய் இருக்கிறது!** எப்படியெனில், பற்பசை விளம்பரத்தில் "ஊத்தை வீசும் வாயை" காட்டியிருப்பார்கள்! அதை காணும் அனைவரும் ஒத்துக்கொண்டாலும், ஊத்தை வாய் உடையவன் அறியாதிருந்தால் எப்படியிருக்குமோ, அவ்வாறாகவே தன்னுடைய சொந்த தீமையை அறியாதவர்கள் இருக்கிறார்கள்! "ஏன், மற்றவர்கள் அதை அவனுக்கு சொல்லமாட்டார்களா?" என நீங்கள் கேட்கலாம். ஆனால், பலமுறை அவர்கள் சொல்ல முயற்சித்தும், அவர்களோ அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒருவேளை, உங்களைக் குறித்த உண்மையை காண்பிக்க விரும்பியவர்கள் பொல்லாத கோபத்தோடும், குத்தி காட்டுவதைப் போலவும் செய்ததை உணர்ந்து 'உங்கள் உண்மையை' காண முடியாமல் போயிருக்கலாம். உங்களிடமிருந்த தவறுகளை நீங்கள் உணர்ந்திருந் தாலும், நீங்கள் அதை முழுமையாக உணரவில்லை என்றே கூற வேண்டும். எப்படியெனில் "நேற்று இரவு நான் என்னுடைய நிதானத்தை இழந்தது உண்மைதான்" என கூறினீர்கள். ஆனால் மற்றவர்களோ நீங்கள் **எப்போதுமே நிதானம் இழக்கும் நபர்** என அறிந் திருக்கிறார்கள்! நீங்களோ "போன சனிக்கிழமைதான் நான் அதிகமாய் குடித்து விட்டேன் என்பதை ஒத்துக்கொள்கிறேன்" என கூறினீர்கள். ஆனால், மற்ற அனைவரும் அறிந்திருப்பது என்னவென்றால் **'நீங்கள் தொடர்ச்சியான குடிப்பழக்கம் கொண்டவர்'** என்பதுதான்.

நான் காணும் விதத்தை விட தேவன் காணும் விதம் முற்றிலும் வித்தியாசமானது! தேவன் எல்லோருடைய குணாதிசயத்தையும் நோக்கிப் பார்க்கிறார். நாமோ 'எல்லோரையும் பார்த்துவிட்டு' நம் குணாதிசயத்தை பார்க்கத் தவறுகிறோம். தேவனைக் குறித்த இரண்டாவது முக்கிய வித்தியாசம் என்னவென்றால் "ஜனங்களிடம் தவறு இருந்தாலும், அவர்களை நேசிக்கிறார்" என்பதுதான். **அவருடைய அன்பு தொடர்ச்சியானது! அதில் முறிவு ஏற்படுவதில்லை.** சில

*சமயங்களில் நாம் சொல்ல முற்படுவது என்னவென்றால்:*

**“தேவனுக்கு சரிதான்! ஆனால் இதுபோன்ற ஜனங்களிடம் அவர் வாழவில்லையே” என்பதுதான். ஆனால், நீங்கள் சொல்வது தவறு! அவர் ஜனங்களுக்கு உள்ளேயும் இருக்கிறார், அவர்களுக்கு வெளியேயும் இருக்கிறார்!**

*நம்மில் யாரைக் காட்டிலும், தேவனே அவர்களோடு நெருங்கி யிருக்கிறார். அவர்களுக்குள்..... அதேசமயம், நமக்குள்ளும் எழும்பும் பொறாமை, வெறுப்பு, பொருளாசை, பகை, பெருமை ஆகிய அனைத்தும் அவருடைய நீடியபொறுமைக்கும், நிலைத்திருக்கும் அன்பிற்கும் விரோதமாயிருக்கிறபடியால் ‘நம்மைக் காட்டிலும்’ உங்கள் சீர்கேடுகள் அவருடைய இருதயத்தை அதிக வேதனைப் படுத்துகிறது. தேவனுடைய இவ்வித இரண்டு முக்கிய குணாதிசயங் களை நாமும் பெற்றிருந்தால் ‘தேவனைப்போலவே’ அதிக வளர்ச்சி அடைந்திருப்போம்.*

*தேவனைக் குறித்த இந்த ஆதாரத்தின்படி நாம் வாழ்ந்துவிட்டால், ‘அந்த நமது நபரை’ அதிகமாய் நேசிக்கத் தொடங்கியிருப்போம். மேலும் ‘அந்த நமது நபருக்குரிய’ தீமைகள், நமக்குள்ளும் இருக்கக் கூடுமோ? என்பதைக் காணும் நல்ல தேடுதல் முயற்சி தொடங்கி விடும். இப்படியெல்லாம் ‘நமக்குள்ளிருக்கும் குறைகளை தேட முயற்சிப்பது’ சுய - ஆக்கினைக்குரிய பிணியை கொண்டு வந்துவிடும்! என சிலர் கூறுவதுண்டு. அப்படியும் சில பெலவீனமான ஜனங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதை நாம் ஏற்பதில்லை! ஆனால், துரதிருஷ்டவசமாய் ‘பிறருடைய பிழைகளையே சிந்தித்து மகிழ்கின்ற’ ஜனத்திரளை நாம் என்னவென்று சொல்வது? பெரும்பாலோர் ‘இந்தப் பிணி கொண்டவர்களாகவே’ இருக்கிறார்கள்!*

**நாம் செய்யும்படியாக ‘சில நியாயபூர்வமான பங்கு’ நமக்குத் தரப்படுவதை நாம் பொதுவாய் விரும்புவதில்லை! ஆகிலும், சில முக்கிய ‘நியாய பூர்வமான பங்கு’ நமக்குள் கண்டிப்பாய் வைத்திருக்க வேண்டும் என்றே அனைவருக்கும் புத்தி சொல்கிறேன். அது என்னவென்றால்: மற்ற ஜனங்களின் சகலவித தவறுகளையும் குறித்த சிந்தைகளை விட்டு நாம் நீங்கலாகியிருக்க வேண்டும் என்பதுதான். ஒருவேளை நீங்கள் ஒரு போதகனாயிருந்தால் அல்லது பெற்றோராயிருந்தால், உங்கள் எல்கைக் குரிய நபர்களிடம் அவர்களின் தப்பான எண்ணங்களை சிந்தித்து ‘அதை சுட்டிக்காட்டுவது’ உங்கள் கடமையாயிருக்கும், அவ்வளவுதான்!**

இதைத் தவிர, வேறு யாரைக் குறித்த தேவையற்ற சிந்தைகள்

*உங்கள் மனதில் எழுந்தாலும் அதை வெளியே தூக்கி எறிவது எளிதான காரியம் தானே? அவ்வாறு செய்துவிட்டு, உங்கள் சொந்த தவறுகளை மாத்திரம் சிந்திக்கத் தொடங்கக் கூடாதா?*

**தேவனுடைய உதவியைக் கொண்டு, நீங்கள் நிச்சயமாய் சில நன்மைகளை செய்துவிட முடியும். அதுஎன்னவென்றால் உங்கள் வீட்டிலுள்ள அல்லது உங்கள் வேலை ஸ்தலத்திலுள்ள, எல்லா அருவருப்பான ஜனங்களின் மத்தியிலும் "நீங்கள் நல்லவராய் மாறிட முடியும்".**

*ஆகிலும், அவ்வாறு நீங்கள் மாறும் உண்மை, உங்கள் நல்ல ஆரம்பத்தைப் பொறுத்தே இருக்கிறது. அப்படியிருந்தால், நீங்கள் நிச்சயம் நல்லவர்களாய் மாறுவீர்கள்! இவ்வாறு நீங்கள் செய்வதற்கு தயங்கி, பின்வாங்கும்போது "அந்த நல்ல ஆரம்பிக்கும் நாள்" கடினமாகிக் கொண்டே போகும், என்பதுதான்!*

*இதற்கு முடிவுதான் என்ன? இப்போது நீங்கள் தெளிவாய் ஒரு உண்மையை கண்டு கொண்டீர்கள்..... 'அந்த நமது நபர்' தொடர்ந்து துர்க்குணத்திலும் பொறாமையிலும் சுய நலத்திலும் தங்கி வாழ்பவரா யிருந்தால், சர்வவல்ல தேவன்கூட தன் முழு வல்லமையையும் பிரயோகித்தால் கூட 'அந்த நமது நபரை' மாற்றவோ அல்லது மகிழ்ச்சி யாக்கவோ முடியாது! 'உங்களுக்குள் வாசம் செய்யும் ஒன்று' மாறுதலடையவில்லையென்றால்..... 'அது' நீங்கள் நித்தியமான வேதனைக்குள் போய்விடாது தடுக்கும்* **தேவனுடைய வல்லமையை** *உங்களைவிட்டு தூர தள்ளிவைத்துவிடும். 'உங்களுக்குள் வாசம் செய்யும்* **அது** *இருக்கும் வரை' இனிய நறுமணத்தை முகர்ந்து பார்க்க முடியாத மனிதனைப் போலவும்! செவிடனை மகிழ்விக்க முடியாத இன்னிசை போலவும்..... உங்களுக்கும் பரலோக வாசம் தூரமாய் போய்விடும்! இங்கு, தேவன் உங்களை நரகத்திற்கு அனுப்பி விட்டார் என்ற கேள்விக்கு இடமேயில்லை! 'நமக்குள்ளிருக்கும் அது' வளர்ந்து வந்தால், அதுவே நமக்கு நரகமாய் மாறிவிடும். தெய்வ கிருபையைக் கொண்டு இப்போதே 'அதை' நீங்கள் ஏன் பிடுங்கி எறியக்கூடாது! இதுவரை நீங்கள் வாசித்த சத்தியம் மிகவும் 'சீரியஸான' ஒன்று: இந்த நாளில், இந்த மணித்துளியில், உங்களை உடனடியாக கர்த்தருடைய கரத்தில் அர்ப்பணம் செய்வீர்களாக! ஆமென்.*

– *C.S. லூவிஸ்* (19-ம் நூற்றாண்டு)

# பேட்ரிக் ஹெமில்டன்

## 'விசுவாச பிரசங்கத்திற்காக' எறிக்கப்பட்டவர்!



( AD 1504-1528)

ஸ்காட்லாந்து தேசத்தின் பேட்ரிக் ஹெமில்டன், மார்டின் லூத்தர் கொண்டு வந்த எழுப்புதலில் ஈர்க்கப்பட்டவர். தன் உயர் கல்லூரி படிப்பை 1520-ம் ஆண்டு, பாரீஸ் பட்டணத்திலுள்ள கல்லூரியில் முடித்தார். அங்குதான், மார்டின் லூத்தர் கொண்டு வந்த 'சுவிசேஷ எழுச்சி' புத்தகங்களைப் படித்தார். 1524-ம் ஆண்டு தன்னை ஒரு 'மானிட அன்பு' இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். தன் தேசத்திற்கு திரும்பி, தான் கண்டடைந்த விசுவாசத்தை அங்குள்ள அனைவருக்கும் அறிவிக்க அதிக விருப்பம் கொண்டிருந்தார்.

ஆனால், 1527-ம் ஆண்டு *St.*ஆண்ரூஸ் தலைமை பிஷப், பேட்ரிக் ஹெமில்டன் எழுச்சியுடன் கொண்டு வந்த, 'இயேசுவின் மீது கொண்ட விசுவாச உபதேசத்தை' துர்உபதேசம் என குற்றம் சாட்டினார். பேட்ரிக்கை சிறைப்பிடிக்க வகை தேடியபோது, ஜெர்மன் நாட்டிற்கு தப்பி ஓடினார். ஆகிலும், 1527-ம் ஆண்டின் கடைசியில் ஸ்காட்லாந்து தேசத்திற்கு திரும்பி, தன் அண்ணன் வீட்டில் தங்கி, **'விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பை' தீவிரமாய் பிரசங்கித்தார்.** இந்நாட்களில் தான், பிரபு பரம்பரையைச் சேர்ந்த **'பியாட்டன்'** (Beaton) சகோதரியை திருமணம் செய்து கொண்டார்.

இச்சமயத்தில் அவரை கைது செய்வதற்கு பின்வாங்கிய கத்தோலிக்க குருமார்கள் அவரை St.ஆண்ரூஸ் கான்பரன்ஸிற்கு அழைத்தார்கள். தான் அங்கு சென்று பிரசங்கித்தால், கண்டிப்பாய் கொல்லப்படுவோம் என பேட்ரிக் அறிந்திருந்தார். ஆகிலும், அவ்வாறு கொல்லப்பட்ட பிறகு, 'இயேசுவின் உண்மை சத்தியம்' அநேகர் அறிந்து கொள்வார்கள் என்ற தீர்க்கமான எண்ணத்தோடு அங்கு சென்றார். அங்கு ஒருமாத பிரசங்க ஊழியத்தில் 'நியாயப்பிரமாணத்திற்கும் சுவிசேஷத்திற்கும்' உள்ள வித்தியாசத்தை ஆழமாய் வலியுறுத்தினார். முடிவில், ஆர்ச் பிஷப் தலைமையில், அவரை விசாரணைக்கு அழைப்பதுபோல் அழைத்து, **'கள்ள உபதேசவாதி' என்று குற்றம் சாட்டப்பட்டு,** எந்த விசாரணையும் இல்லாமல் *St.*சல்வேட்டர் ஆலயத்திற்கு முன்பாக கம்பத்தில் எறிக்கப்பட்டார். மதியம் முதல் மாலை 6 மணி வரை அந்த கம்பம் எறிந்து தீர்ந்தது. அவருடைய கடைசி வார்த்தை "ஆண்டவராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்பதுதான். ஸ்காட்லாந்தில் "எங்கெல்லாம் எறிக்கப்பட்ட அவரின் உடலில் இருந்து புகை சென்றதோ, அங்கெல்லாம்" கிறிஸ்துவுக்கு தொண்டர்கள் எழும்பினார்கள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே 'சிலரது ஜெபம்' உன் ஆத்துமாவை இரட்சிக்கும்!

நான் சந்தித்த இருதய கடினம் கொண்ட அவனை மறக்கவியலாது. ஓ, மனந்திரும்புதலுக்கு அவன் எத்தனை விரோதமாக எதிர்த்து நின்றான்! அவனுக்கு ஒரு பக்தியுள்ள மனைவி இருந்தாள். அவன் அவளை அதிகமாக நேசித்தான். அவனுக்காக அவள் ஜெபிப்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். அவன் ஆத்துமாவின் நன்மையைக் கருத்தில் கொண்டு, நான் அவனிடம் கேட்கும் அன்பான விசாரிப்பின் நிமித்தமாக, அவன் எனக்கு விரோதமாக அவ்வப்போது பைத்தியம் கொண்டவனைப்போல சீறி எழும்பி விடுவான்.

இதன் பின்னர் நீண்ட நாட்கள் இடைவெளிக்குப் பின்னர், நான் அவனைப்பார்த்து "சிநேகிதனே, நீங்கள் உங்கள் இருதயத்தை இரட்சகர் இயேசுவுக்குக் ஒப்புக் கொடாத வரை உங்களுக்கு சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று சொன்னேன். அவன் கோபத்தால் வாயில் நுரை தள்ளிக்கொண்டு உரத்த குரலில் "நீ இந்த இடத்தைவிட்டு உடனே போய்விடு, நான் உன் முகத்தை இனிமேல் பார்க்கக் கூடாது, இல்லையேல் நான் உன்னைக் கொன்று போடுவேன்" என்றான்.

அடுத்த முறை, நான் அந்த மனிதனுடைய வீட்டு வழியாக கடந்து சென்றபோது, அவன் என்னைக் கண்டதும் என்னுடைய கண்ணில் படாதபடிக்கு ஒளித்துக் கொள்ள முயற்சிப்பதை நான் தூரத்திலிருந்து கவனித்தேன். வீட்டுக்குப் பின்னர் உள்ள தானியக் களஞ்சியத்திற்குச் சென்று கதவைப் பலமாகத் தட்டினேன். சற்று நேர இடைவெளிக்குப் பின்னர் தானியக் களஞ்சியத்தின் உள்ளே பெருமூச்சுகள் எழும்பும் சத்தத்தை நான் கேட்டேன். அதற்கப்பால் உள்ளே காலடிகள் எடுத்து வைத்து கதவண்டை நடந்து வரும் சத்தத்தை நான் கவனித்தேன். நான் மிகவும் பயத்துடன் அந்தப் கோபக்கார மனிதர் என்ன தீங்கு செய்து விடுவாரோ? என்ற எண்ணத்தில் நின்று கொண்டிருந்தேன். அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. அங்கே அந்த மனிதர் நின்று கொண்டிருந்தான். அந்த முகத்தில் கோபம் என்பது சற்றும் தென்படாதிருந்தது. அவர் என்னிடம் பேச முயற்சித்தார், ஆனால் அவரால் கூடாது போயிற்று.

நான் அவரிடத்தில் நடந்து சென்று அவருடைய கரங்களைப் பற்றிப் பிடித்து "என் அருமை சகோதரனே, நாம் இப்பொழுது ஜெபம் பண்ணுவோம்" என்று இருவருமாக முழங்காலூன்றினோம். அந்த இடத்தில் எங்களுடைய வார்த்தைகளைவிட இருவர் கண்ணிலும் கண்ணீர்தான் அதிகமாகக் கொட்டினது. இருவரும் ஒன்றாக வருவதை அந்த மனிதரின் மனைவி தூரத்திலிருந்து பார்த்தபோது, அவர்களின் முகம் ஆனந்த சந்தோஷத்தால் நிரம்பியதை எங்களால் காண முடிந்தது!

வாலிபனே, யாரோ சிலர் ஜெபத்தால், உன் ஆத்துமா இரட்சிக்கப்படும் விந்தையை அறிவாயாக!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.